வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.K.சண்முகம் | தொழில் | : | ஆசிரியல் (ஓய்வு) |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணசாமி | வயது | : | |
| கிராமம் | : | ஜேகேஜெ காலனி மாணிக்கா புரம் ரோடு பல்லடம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20.08.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 20.08.2025.**

1) நான் பல்லடம் அரசு உயர் நிலையப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுப்பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். பல்லடம் அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கு வைத்து அவ்ப்போது பணம் சேமித்து வந்தேன். சேமிப்பு கணக்கில் ரூபாய் 40,000 ற்கு மேல் பணம் சேமித்து வைத்திருந்தேன். அந்த பணத்தில் ரூபாய் 25,000/- பக்கம் பணம் எடுத்தேன் மீதமுள்ள 14,000/-ற்கு மேல் பணம் இருக்கும். அஞ்சலகத்தில் விசாரித்தபோது என்னுடைய பணம் இவ்வளவுதான் இருக்கும் என்று சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.33 கோப்பில் உள்ள பாஸ்புக் என்னுடையதுதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) அஞ்சலகத்தில் பணம் குறைவாக உள்ளது என்று அஞ்சலகத்தில் யார் சொன்னார்கள் என்றால் மேல் அதிகாரிகள் சொல்லி இருப்பார்கள் ஞாபகமில்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.08.20 19:26:00 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகன் | தொழில் | : | கூடைபின்னும் தொழில் |
| தந்தை பெயர் | : | ரங்கன் | வயது | : | |
| கிராமம் | : | அம்மாபாளையம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20.08.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 20.08.2025.**

1) நான் பல்லடம் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூடை பின்னும் தொழில் செய்து வருகிறேன். நான் அஞ்சலகத்தில் பணம் சேமித்து வைத்திருந்தேன் நான் மாதம் மாதம் போஸ்ட் ஆபிஸ் சென்று பணம் சேமித்து வைத்திருந்தேன் பின்னிட்டு அந்த பணம் என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.43 பாஸ்புக் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) என்னை தேடி வந்து அஞ்சலக ஏஜென்டுகள் பணம் பெற்று செல்வார்களா என்றால் அவர்களும் வாங்கி செல்வார்கள் நாங்களும் சென்றும் கட்டுவோம்

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.08.20 19:26:07 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.